FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8301668

1. District : திருச்சி. PS: [illegible] Year: 2026 FIR No.: 20 Date: 26.10.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act, 1988 (As amended in 2018) Sections பிரிவுகள்: 7

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 23.10.2026 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : 15.30 hrs. Time to : 20.00 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 26.10.2026 Time : 12.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 26.10.2026 Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : கையால் எழுதி தரப்பட்டது.
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: மாவட்ட நீதிமன்ற நுழைவு அருகாமை திருச்சி சுமார் 1/2 KM தொலைவு
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : மாவட்ட நீதிமன்ற நுழைவு அருகாமை திருச்சி.
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : —
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : [illegible] (b) Father's/ ~~Husband~~'s Name : [illegible]
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 11.05.1967 (d) Nationality : இந்தியன் (e) Passport No. : —
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : — Place of Issue : —
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : [illegible] (g) Address : மாவட்ட ஆட்சியர் அலுவலகம், திருச்சிராப்பள்ளி.
தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. M. தினேஷ்குமார், வயது 32/2026,
S/o [illegible], வருவாய் ஆய்வாளர் எண்-III,
மாவட்ட நீதிமன்ற நுழைவு அருகாமை, திருச்சிராப்பள்ளி.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

-

10. Total value of properties stolen / involved : -
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: -
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

நகல்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

26/10/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய் பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 26.10.2026.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் F. [illegible]
Rank: நிலை [illegible] எண் .....

கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்கு சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது....

திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.20/2026–இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12–ன் தொடர்ச்சி...

அனுப்புநர் வீ.சக்திவேல், த/பெ வீரமலை, முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வு குழு அலுவலகம், திருச்சிராப்பள்ளி. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருச்சிராப்பள்ளி. அம்மா, பொருள்: திருச்சிராப்பள்ளி – நகர் ஊரமைப்பு அலுவலகம் – திடீர் சோதனை மேற்கொண்டது – மேல்நடவடிக்கை எடுக்க வேண்டி.... திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு கிடைக்கப்பெற்ற தொலைபேசி இரகசிய தகவலின் அடிப்படையில் 23.10.2026ம் தேதி பிற்பகல் சுமார் 15.15 மணியளவில் திருச்சி ஊ.த.க பிரிவு அலுவலகத்தில் இருந்து திருச்சி ஊ.த.க பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.F.சேவியர் ராணி, மற்றும் விஜிலென்ஸ் குழுவினருடன் புறப்பட்டு, திருச்சிராப்பள்ளி, நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் 15.30 மணி முதல் 20.00 மணி வரை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது, சோதனையின் போது திரு.சதீஷ்குமார் வரைவாளர் நிலை–3 என்பவரின் கைபேசியின் PhonePe–வில் கணக்கில் வராத தொகை ரூ.1,23,700/– வாவாகியுள்ளது கண்டறியப்பட்டுள்ளது. மேற்படி சம்பவம் குறித்து திடீர் சோதனை செயல்முறைகள்(மகஜர்) தயார் செய்யப்பட்டது. இத்துடன் 23.10.2026 ஆம் தேதி தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறைகள்(மகஜர்) இணைக்கப்பட்டுள்ளது. மேற்படி திடீர் சோதனை செயல்முறைகளின்படி(மகஜர்) நடவவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. தங்கள் உண்மையுள்ள xxxxx(வீ.சக்திவேல்) 26/10/2026 நாள்:26.10.2026 இடம்: திருச்சிராப்பள்ளி **Submitted to the court of the Hon'ble Spl. Judge for the trial cases under the PC Act, Trichy. Received this report at 12.00 hours on 26.10.26 and based on the instructions received from the DVAC., a case was registered in Trichy V&AC Cr.No.20/26 u/s 7 of the Prevention of Corruption Act 1988(as amended in 2018) on 26.10.26 at 13.00 hrs, (Sd)xxxx., F.Xavier Rani, 26/10/2026 Inspr.of Police, V&AC, Trichy.** திடீர் சோதனை செயல்முறை இன்று 23.10.2026 பிற்பகல் சுமார் 15.30 மணிக்கு மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருச்சிராப்பள்ளி மாவட்டம், அலுவலகத்தில் வைத்து திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆய்வு குழு அலுவலரால் நியமித்து அனுப்பிவைக்கப்பட்ட திரு.சக்திவேல், வயது.59/2026, த/பெ.வீரமலை, முதுநிலை வருவாய் ஆய்வாளர், மாவட்ட ஆய்வு குழு அலுவலகம், திருச்சி முன்னிலையில் திருமதி.சேவியர்ராணி, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருச்சி, மற்றும் விஜிலென்ஸ் குழுவினர் உதவியுடன்

மேற்கொள்ளும் திடீர் சோதனையின் செயல்முறை நடவடிக்கைகள் மடிக்கணினி மூலம் தயார் செய்யப்படும் திடீர் சோதனை செயல்முறைகள்.

மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருச்சிராப்பள்ளி மாவட்டம் அலுவலகத்தில் பணியாற்றும் பொதுப்பணியாளர்கள் தங்கள் அலுவலகப்பணியினை செய்து தருவதற்காக பொது மக்களிடமிருந்து கையூட்டு கேட்டுப்பெறுவதாகவும், பொது மக்களிடமிருந்து கட்டிடங்களுக்கு அனுமதி மற்றும் மனைகளை வரன்முறைபடுத்துவதற்காக நிர்ணயித்த கட்டணத்தைவிட கூடுதலாக பணம் பெற்று தாங்களும் பயன் பெறுவதாகவும், திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு கிடைத்த ரகசிய தகவலின் பேரில் இன்று 23.10.2026 மாலை சுமார் 15.30 மணிக்கு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வருவாய் ஆய்வாளர், திரு.சக்திவேல் மற்றும் திருச்சி விஜிலென்ஸ் குழுவினர் சகிதம் திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி அனைத்து அறைகளிலும் உள்ள பணியாளர்களை கண்காணிக்க காவலர்கள் நிறுத்தி வைக்கப்பட்டது.

மேற்படி அலுவலகத்தின் வளாகத்தின் உள்ளே நுழைந்தவுடன் பொதுமக்கள் அமரும் அறையும், அதனை அடுத்து ஒரு பெரிய ஹாலும் உள்ளது. மேற்படி ஹாலின் இடது புறம் மேல்நிலை கணக்கர் அறையும், அதன் எதிரே உதவி இயக்குநர் அறையும், அதனை அடுத்து இணை இயக்குநர் அறையும் உள்ளது. மேற்படி பெரிய ஹால் மூன்று தடுப்புகளாக பிரிக்கப்பட்டு, அதில் அலுவலர்கள் அமர்ந்து பணிபுரிந்து கொண்டிருந்தனர். மேலும். பொதுமக்கள் அமரும் அறையில் நான்கு தனிநபர்கள் அமர்ந்திருந்தனர்.

மேற்படி ஹாலில் இருந்த அலுவலர்களின் பெயர் மற்றும் அவர்கள் வைத்திருந்த பண விபரங்கள் பின்வருமாறு.

வ.எண்	பெயர்/ முகவரி	பார்வையிடப்பட்ட பணம் ரூ.	கைப்பற்றப்பட்ட பணம் ரூ.
1.	திரு.முகமது சித்திக், வயது 47/2026, த/பெ சாகுல் ஹமீது, மேல்நிலை கணக்கர்.	60/-	-
2.	திருமதி.ராதா, வயது 42/2026, க/பெ துரைபாண்டி ராஜா, மேற்பார்வையாளர்.	450/-	-
3.	திரு.விக்னேஷ், வயது 30/2026, த/பெ செல்லதுரை, கட்டிட கலை திட்ட உதவியாளர்.	620/-	-
4.	காமேஸ்வரி, வயது 24/2026, த/பெ. கார்த்திகேயன், சர்வேயர் பயிற்சி.	200/-	-
5.	திருமதி.வித்யா சங்கரி, வயது 28/2026, க/பெ நிவாஸ், த/பெ முத்துகிருஷ்ணன், அளவர்/ உதவி வரைவாளர்.	25/-	-

6.	திருமதி.சொரூபலட்சுமி, வயது 48/2026, க/பெ பாண்டியன், சுருக்கெழுத்தர் / தட்டச்சர்.	250/–	–
7.	திரு.விஸ்வநாதன், வயது 47/2026, த/பெ ரெங்கராஜு, திட்ட உதவியாளர்.	1300/–	–
8.	திரு.கார்த்திக், வயது 32/2026, த/பெ முருகன், வரைவாளர் நிலை–3.	80/–	–
9.	திருமதி.ரதனிகா, வயது 33/2026, க/பெ.பிரபு, இளநிலை உதவியாளர்.	430/–	–
10.	திருமதி.சிலம்பரசி, வயது 39/2026, க/பெ செல்வம், உதவியாளர்.	830/–	–
11.	திரு.சிவகலை, வயது 54/2026, த/பெ நடராஜன், பதிவரை எழுத்தர்.	1100/–	–
12.	திரு.அப்துல் கபூர், வயது 48/2026, த/பெ அப்துல் ஹமீது, ஓட்டுநர்.	370/–	–
13.	திருமதி.வனஜா, வயது 57/2026, க/பெ பாபு, உதவியாளர்.	280/–	–
14.	திரு.சதீஸ்குமார், வயது 32/2026, த/பெ. மாணிக்கம், வரைவாளர் நிலை–3	–	–

மேற்படி அலுவலர்கள் வைத்திருந்த தொகையை, அலுவலகத்தில் உள்ள கையிருப்பு பதிவேட்டுடன் ஆய்வு குழு அலுவலர் மூலம் ஒப்பிட்டு பார்க்க சரியாக இருந்தது. எனவே, மேற்படி அலுவலர்களிடம் உள்ள தொகை ஆய்வு குழு அலுவலர் மூலம் அவரவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி அலுவலகத்தில் இருந்த தனிநபர்கள் பெயர் மற்றும் அவர்கள் வைத்திருந்த பண விபரம் பின்வருவாறு.

வ.எண்	பெயர்/ முகவரி	பார்வையிடப்பட்ட பணம் ரூ.	கைப்பற்றப்பட்ட பணம் ரூ.
1.	திரு.சிரஞ்ஜீவி, வயது 29/2026, த/பெ வெங்கடேசன், உதவியாளர், Trichy Cad Centre, காஜாமலை, திருச்சி.	10/–	–
2.	திரு.விஜயகுமார், வயது 47/2026, த/பெ. கலியபெருமாள், நேவா அப்பார்ட்மெண்ட், மரிய கார்டன், புத்தூர், திருச்சி.	1020/–	–
3.	திரு.விஸ்வநாதன், வயது 52/2026, த/பெ ராமசாமி, எண்.6, ஸ்ரீசாய் அவன்யூ, மூலதோப்பு, ஸ்ரீரங்கம், திருச்சி.	20/–	–
4.	திரு.கேசவராஜ், வயது 57/2026, த/பெ சீனிவாசராஜ், எண்.45, ஹெச்–4வது தளம், நரசிம்மா நெஸ்ட் அப்பார்ட்மெண்ட், சண்முகா நகர் மெயின் ரோடு, உய்யகொண்டான்திருமலை, திருச்சி.	–	–

மேற்கண்ட வரிசை எண்.1ல் கண்ட தனிநபரை ஆய்வு குழு ஆய்வாளர் விசாரணை செய்ய, தான் வரைபடம் திருத்தம் செய்ய கொடுப்பதற்கு வந்ததாகவும், மேலும் வரிசை எண்.2, 3, 4–ல் கண்ட தனிநபர்களை விசாரணை செய்ய தாங்கள் தங்களுடைய மனை வரன்முறை தொடர்பான விளக்கம் கேட்க வந்ததாக தெரிவித்தனர். மேலும் அவர்களிடம் உள்ள தொகைப்பற்றி ஆய்வு குழு அலுவலர் கேட்க, அவாவர்கள் தங்களுடைய சொந்தப்பணம் என்று தெரிவித்ததால், அப்பணம் ஆய்வு குழு அலுவலர் மூலம் அவரவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

மேற்படி அலுவலகத்தில் வரன்முறைபடுத்துவது தொடர்பான கட்டிடங்களுக்கான அனுமதி, மனை வரன்முறைபடுத்துவதற்கான அனுமதி கோரிய மனுக்கள் குறித்த கோப்புகளை பார்வையிட்டப்பட்டது. அதில் கீழ்கண்ட நிலுவையில் உள்ள மனுக்கள் தொடர்பாக விபரங்களை திரு.விஸ்வநாதன், மேற்பார்வையாளர் அவர்களிடம் கேட்க, அவர் இணையதளம் மூலம் கணிணியில் பிரிண்ட் எடுத்து ஆஜர் செய்தார்.

அதன்படி **Building approval** தொடர்பாக 45 நாட்களுக்கு மேல் நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் நிலுவையில் உள்ள மனுக்கள் மொத்தம்–7, மேலும், **Layout approval** தொடர்பாக 45 நாட்களுக்கு மேல் நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் நிலுவையில் உள்ள மனுக்கள் மொத்தம்–8 ஆகும்.

மேலும், **Building approval** தொடர்பாக 45 நாட்களுக்கு மேல் விண்ணப்பதாரர்களிடம் நிலுவையில் உள்ள மனுக்கள் மொத்தம்–49, மேலும், **Layout approval** தொடர்பாக 45 நாட்களுக்கு மேல் விண்ணப்பதாரர்களிடம் நிலுவையில் உள்ள மனுக்கள் மொத்தம்–69 ஆகும்.

மேலும், அலுவலகத்தில் உள்ள திரு.சதீஸ்குமார், வரைவாளர் நிலை–3 என்பவரின் செல்போனில் இருந்த **Phonepe** பரிவர்த்தனைகள் குறித்து ஆய்வு குழு அலுவலரால் சந்தேகத்துடன் கேட்க, திரு.சதீஸ்குமார் தானே முன்வந்து தனது **Phonepe** பரிவர்த்தனைகளை தனது செல்போனில் உள்ளீடு செய்து காண்பிக்க அதில், கடந்த டிசம்பர்–2025 முதல் அக்டோபர்–2026 வரை பார்வையிட்டதில் சந்தேகத்திற்கிடமான வகையில் சில தனி நபர்களால் ரூபாய் 1000–க்கும் அதிகமாக பண பரிவர்த்தனைகளாக மொத்தம் ரூ.1,23,700/– தொகை வரவாகியிருந்தது. மேற்படி பண பரிவர்த்தனைகள் தூத்துக்குடி மாவட்டம், சாத்தான் குளம் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி கணக்கு எண்.012401000026985 என்ற வங்கி கணக்கில் வரவாகியுள்ளது தெரியவருகிறது.

	பணபரிவர்த்தனை செய்த தனி நபர்கள்	திரு.சதீஸ்குமார் அவர்களுக்கு சந்தேகத்தற்கிடமான வகையில் Phonepe வரவாகியுள்ள தொகை	UPI Transaction
1.	திரு.கோகுல்ராஜ்	67700	T260712190137645560627
2.	TPJ விக்னேஷ்	10000	T260406114407309154890 9
3.	திரு.சங்கீதமுருகன்	25000	T260525192708085689 1519
4.	திரு.கோபிகுமார்	10000	T260508175025008304 5321
5.	திரு.டிராவிட்	11000	T260401121004940785 2308

மேலும், இதர அலுவலக பணியாளர்கள் மற்றும் தனிநபர்களின் செல்போனில் இருந்த **G-Pay/ Phonepe** பரிவர்த்தனைகளை பார்வையிடப்பட்டதில் சந்தேகத்திற்கிடமான வகையில் எவ்வித பரிவர்த்தனைகளும் காணப்படவில்லை.

மேற்படி அலுவலகத்தில் உள்ள அலுவலர்கள் கையிருப்பு பதிவேடு மற்றும் 2026 ஆம் ஆண்டிறக்கான வருகைப்பதிவேடுகளை திரு.விஸ்வநாதன், மேற்பார்வையாளர் அவர்களிடம் கேட்க, அவர்கள் அலுவலகத்திலிருந்து எடுத்து ஆஜர் செய்ததை, மேல்நடவடிக்கைக்காக காவல் ஆய்வாளரால் கைப்பற்றப்பட்டது. மேலும், 45 நாட்களுக்கு மேல் நிலுவையில் உள்ள மனுக்களை இணைய தளம் மூலம் பிரிண்ட் எடுத்து உண்மை நகல் என சான்றொப்பமிடப்பட்டதை மேல்நடவடிக்கைக்காக காவல் ஆய்வாளரால் கைப்பற்றப்பட்டது.

மேற்படி திடீர் சோதனை தொடர்பான அனைத்து நிகழ்வுகளும் வீடியோ பதிவுகள் செய்யப்பட்டது. அலுவலகத்தில் போதிய மின்சார வசதிகள் செய்யப்பட்டிருந்தது. திடீர் சோதனையின் போது மேற்படி அலுவலகத்தில் உள்ள எந்த பொருட்களுக்கும் சேதாரம் ஏற்படவில்லை. இந்த திடீர் சோதனை இரவு 20.00 மணிக்கு முடிக்கப்பட்டது.

மேற்படி வேண்டுகோள் கடிதம் உடன் கூடிய திடீர் சோதனையில் கண்டுள்ள எதிரி திரு.சதீஷ்குமார் வயது 32/2026, த/பெ மாணிக்கம், வரைவாளர், நிலை-3, மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், திருச்சி என்பவர் மீது திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.20/2026 ச/பி 7 of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018) ன்படி வழக்கு பதிவு செய்யப்படுகிறது.

இவ்வழக்கின் முதல் தகவல் அறிக்கை அசல் மற்றும் திருச்சி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலக, முதுநிலை வருவாய் ஆய்வாளர் திரு.சக்திவேல் அவர்கள் கொடுத்த 26.10.2026 தேதியிட்ட கடிதம் மற்றும் 23.10.2026 தேதியில் தயார் செய்யப்பட்ட திடீர் சோதனை செயல்முறை(மகஜர்) ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், திருச்சி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது. இதர நகல்களை சம்மந்தப்பட்ட மேல் அதிகாரிகளுக்கு அனுப்பியும், ஒரு நகலை கோப்பில் வைக்கப்பட்டது.